**சி.பி.எண்.73/2025** **18.05.2026**

**ம.த.சாட்சி -1 திரு. சிவக்குமார் குறுக்கு விசாரணை**

நான் கணக்கீட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டு அதன் அடிப்படையில் நிர்வாகம் பணம் அளிக்காத பட்சத்தில் தான் கணக்கீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த ம.த.சா.ஆ.2ல் நிர்வாகம் எனக்கு ரூபாய் 1,08,160 வழங்க வேண்டும் என்று கோரியுள்ளேன் எதன் அடிப்படையில் அந்த தொகையை கோரியுள்ளேன் என்றால் ஒரு நாளைக்கு நான் பெண் பயணிகளுக்கு சுமார் 1000 டிக்கெட்டுகள் வழங்குகிறேன் ஒரு டிக்கெட்டின் விலை 16 ரூபாய் அதன் அடிப்படையில் கணக்கிட்டு மேற்சொன்ன தொகையை கோரினேன். 1000 பயணிகளுக்கு டிக்கெட் வழங்கியதற்கான ஆவணத்தை எனது மனுவுடன் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களின் பட்டியலில் அதை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நிருபண வாக்குமூலம் பத்தி எண் 4ல் நடத்துனர்கள் பணியாற்றும் நாளில் பயணச்சீட்டு வாயிலாக வசூலாகும் தொகைக்கு ரூபாய் 100க்கு ரூபாய் 1.30 பைசா வீதம் வசூல்படி நடத்துனர் மற்றும் ஓட்டுநருக்கு சமமாக பகிர்ந்து அளிக்கப்படும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2021ல் இருந்து பெண் பயணிகளிடம் பயணத்தொகை வசூல் செய்யப்படுவதில்லை என்றால் சரிதான். இலவச பயணச்சீட்டுகளுக்குண்டான பயணப்படி நிர்வாகத்தால் வழங்கப்படுவதில்லை என்றால் சரிதான். மேலும் இந்த கோரிக்கை குறித்து இந்த மனுவை தவிர வேறு எந்த மனுவும் நிர்வாக்திடம் நான் அளிக்கவில்லை என்றால் சரிதான். வசூல் செய்த பயணச்சீட்டிற்கு தான் பயணப்படி கொடுக்க வேண்டுமே தவிர வசூல் செய்யப்படாத பயணச்சீட்டிற்கு பயணப்படி அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றால் அரசாங்கம் நிர்வாகத்திற்கு அந்த பயணச்சீட்டிற்கான மானியம் வழங்கிவிடுவதால் நான் பயணப்படி கோருகிறேன். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சக ஊழியருக்கு ஆதரவாக நான் குடும்ப விசாரணையில் கலந்து கொண்டேன் அப்போது அந்த விசாரணையில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை தான் நான் ம.த.சா.ஆ.1ஆக

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பணம் வசூல் செய்யப்படாததால் எனக்கு பயணப்படி வழங்கப்படமாட்டாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.05.18 12:47:32 +0530

Presiding Officer,
Principal Labour Court, Vellore.